இந்திய அரசாங்கம்

சட்ட, நீதி மற்றும் நிறும அலுவல்கள் அமைச்சகம்

# வேளாண் மற்றும் பதனஞ்செய்யப்பட்ட உணவுப் பொருள்கள் ஏற்றுமதி மேல்வரிச் சட்டம், 1985

**(சட்ட எண் 3/1986)**

**(1997, டிசம்பர் 31 அன்று இருந்தவாறு)**

# THE AGRICULTURAL AND PROCESSED FOOD PRODUCTS EXPORT CESS ACT, 1985

**(Act No. 3 of 1986)**

**(As on the 31st December, 1997)**

தமிழாக்கம் :

இந்திய அரசாங்கத்திற்காக

சட்ட (ஆட்சிமொழிப் பிரிவு)த் துறை

சென்னை-9

தமிழ்நாடு அரசாங்க எழுதுபொருள் அச்சுத்துறை இயக்குநரால்
அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது
2003

# வேளாண் மற்றும் பதனஞ்செய்யப்பட்ட உணவுப் பொருள்கள் ஏற்றுமதி மேல்வரிச் சட்டம், 1985

(சட்ட எண் 3/1986)

# THE AGRICULTURAL AND PROCESSED FOOD PRODUCTS EXPORT CESS ACT, 1985

(Act No. 3 of 1986)

31-35—1

# வேளாண் மற்றும் பதனஞ்செய்யப்பட்ட உணவுப் பொருள்கள் ஏற்றுமதி மேல்வரிச் சட்டம், 1985

(சட்ட எண் 3/1986)

பொருளடக்கம்


| பிரிவுகள் | | பக்கங்கள் |
|---|---|---|
| 1. | குறுந்தலைப்பு, அளாவுகை மற்றும் தொடக்கம். | 1 |
| 2. | பொருள்வரையறைகள். | 1 |
| 3. | இணைப்புப்பட்டியலில் கண்ட பொருள்களின் மீது சுங்கத் தீர்வைகள். | 1 |
| 4. | தீர்வைகளிலிருந்து கிடைக்கும் நிகரத்தொகை இந்தியாவின் திரள் நிதியத்தில் வரவு வைக்கப்படுதல். | 2 |

# PREFACE

This edition of the Agricultural and processed Food Products Export Cess Act, 1985 (Act No. 3 of 1986) as on the 31st December, 1997 containing the Authoritative Texts of that Act in Tamil and the same was published in the Gazette of India, Extraordinary, Part XV, Section 1, Vol. I-dated 9th June, 1999 on Pages from 1 to 2.

The Authoritative Texts in Tamil was published under the authority of the President under clause (a) of section 2 of the Authoritative Texts (Central Laws) Act, 1973 (50 of 1973) and on such publication, it become the Authoritative Texts of the Act in Tamil.

New Delhi,
9th June, 1999

Signed..........,
*Secretary to Government of India*

# முன்னுரை

1997, டிசம்பர் 31 அன்று இருந்தவாறுள்ள வேளாண் மற்றும் பதனஞ்செய்யப்பட்ட பொருள்கள் ஏற்றுமதி மேல்வரிச் சட்டம், 1985 (சட்ட எண் 3/1986) இன் இந்தப் பதிப்பு அச்சட்டத்தின் அதிகாரவுரிமைப்படியான தமிழ் வாசகத்தைக் கொண்டுள்ளது, இது, 1999 ஜூன் 9 ஆம் தேதியிட்ட இந்திய அரசிதழின் சிறப்பிதழ் பகுதி XV பிரிவு 1, தொகுதி I இன் 1 முதல் 2 வரையிலான பக்கங்களில் வெளியிடப்பட்டது.

இந்த அதிகாரவுரிமைப்படியான வாசகமாகிய தமிழ்மொழிப்பெயர்ப்பு, அதிகாரவுரிமைப்படியான வாசகங்கள் (மையச் சட்டங்கள்) சட்டம், 1973இன் (50/1973) பிரிவு 2இன் கூறு (அ)வின் படி குடியரசுத் தலைவருக்குள்ள அதிகாரத்தின்படி வெளியிடப்பட்டது. அவ்வாறு வெளியிடப்பட்டதன் பேரில், இது தமிழில் அச்சட்டத்தின் அதிகாரவுரிமைப்படியான வாசகம் ஆயிற்று.

புதுதில்லி
9, ஜூன், 1999

(ஒப்பம்) . . . . . .
இந்திய அரசாங்கச் செயலாளர்

# வேளாண் மற்றும் பதனஞ்செய்யப்பட்ட உணவுப் பொருள்கள் ஏற்றுமதி மேல்வரிச் சட்டம், 1985

(சட்ட எண் 3/1986)

[1986, ஜனவரி 8]

குறித்தசில வேளாண் மற்றும் பதனஞ்செய்யப்பட்ட உணவுப் பொருள்களின் ஏற்றுமதியை வளர்ப்பதற்கும், ஊக்குவிப்பதற்கும், அவற்றை ஏற்றுமதி செய்வதன்மீது, மேல்வரி என்னும் முறையில் ஒரு சுங்கத் தீர்வையை விதித்து ஈட்டுவதற்கும் மற்றும் அதனுடன் தொடர்புடைய பொருட்பாடுகளுக்கும் வகை செய்வதற்கான ஒரு சட்டம்.

இந்திய குடியரசின் முப்பத்து ஆறாம் ஆண்டில் நாடாளுமன்றத்தால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:—

குறுந்தலைப்பு, அளாவுகை மற்றும் தொடக்கம்.

1.(1) இந்தச் சட்டம், வேளாண் மற்றும் பதனஞ்செய்யப்பட்ட உணவுப் பொருள்கள் ஏற்றுமதி மேல்வரிச் சட்டம், 1985 என்று வழங்கப்பெறும்;

(2) இது, இந்தியா முழுவதையும் அளாவிநிற்கும்.

(3) இது, மைய அரசாங்கம், அதிகாரமுறை அரசிதழில் அறிவிக்கை வாயிலாகக் குறித்திடலாகும் தேதியன்று செல்லாற்றல்பெறும்.

பொருள் வரையறைகள்.

2(1). இந்தச் சட்டத்தில், தறுவாயின் தேவை வேறானலன்றி,—

(அ) "அதிகார அமைப்பு" என்பது, வேளாண் மற்றும் பதனஞ்செய்யப்பட்ட உணவுப் பொருள்கள் ஏற்றுமதி வளர்ச்சி அதிகாரஅமைப்புச் சட்டம், 1985 இன் பிரிவு 4இன் படி நிறுவப்பட்ட வேளாண் மற்றும் பதனஞ் செய்யப்பட்ட உணவுப் பொருள்கள் ஏற்றுமதி வளர்ச்சி அதிகாரஅமைப்பு என்று பொருள்படும்;

(ஆ) "இணைப்புப்பட்டியலில் கண்ட பொருள்" என்பது, வேளாண் மற்றும் பதனஞ்செய்யப்பட்ட உணவுப் பொருள்கள் ஏற்றுமதி வளர்ச்சி அதிகாரஅமைப்புச் சட்டம், 1985இன் இணைப்புப் பட்டியலில் அப்போதைக்குச் சேர்க்கப்பட்டிருக்கும் பொருள் எதுவும் என்று பொருள்படும்.

(2) இந்தச் சட்டத்தில் பயன்படுத்தப்பட்டுப் பொருள்வரையறை செய்யப்படாத, ஆனால் வேளாண் மற்றும் பதனஞ்செய்யப்பட்ட உணவுப் பொருள்கள் ஏற்றுமதி வளர்ச்சி அதிகாரஅமைப்புச் சட்டம், 1985இல் பொருள் வரையறை செய்யப்பட்டுள்ள அனைத்துச் சொற்களும், சொற்றொடர்களும் அந்தச் சட்டத்தில் அவற்றிற்கு முறையே குறித்தளிக்கப்பட்டுள்ள பொருளினை உடையன ஆகும்.

இணைப்புப் பட்டியலில் கண்ட பொருட்களின் மீது சுங்கத் தீர்வைகள்.

3. (1) வேளாண் மற்றும் பதனஞ்செய்யப்பட்ட உணவுப் பொருள்கள் ஏற்றுமதி வளர்ச்சி அதிகார அமைப்புச் சட்டம், 1985இன் நோக்கங்களைப் பொறுத்தவரை, ஏற்றுமதிசெய்யப்படுகிற, இணைப்புப்பட்டியலில் கண்ட பொருள்கள் அனைத்தின் மீதும், மைய அரசாங்கம், அதிகாரமுறை அரசிதழில் அறிவிக்கை வாயிலாகக் குறித்துரைக்கலாகும் மதிப்பீட்டின்படி மூன்று விழுக்காட்டிற்கு மிகாத வீதத்தில் ஒரு சுங்கத் தீர்வை, மேல்வரி என்னும் முறையில் விதிக்கப்பட்டு ஈட்டப்படுதல் வேண்டும்.

(2) இணைப்புப்பட்டியலில் கண்ட பொருள்களின்மீது உட்பிரிவு (1)இன் படி விதிக்கப்படும் சுங்கத்தீர்வைகள், அத்தகைய பட்டியலில் கண்ட பொருள்களின் மீது அப்போதைக்குச் செல்லாற்றலிலுள்ள பிற சட்டம் எதன்படியும் விதிக்கத்தக்க மேல்வரி அல்லது தீர்வை எதற்கும் கூடுதலானதாக இருத்தல் வேண்டும்.

(3) திருப்பிக்கொடுப்புகள் மற்றும் தீர்வையிலிருந்து செய்யப்படும் விலக்களிப்புகள் தொடர்பானவை உள்ளடங்கலாக, சுங்கச் சட்டம், 1962இன் வகையங்களும், அவற்றின்படி வகுக்கப்பட்ட விதிகளும், ஒழுங்குறுத்தும் விதிகளும், கூடிய வரையில், அந்தச் சட்டம் அல்லது அந்த விதிகள் மற்றும் ஒழுங்குறுத்தும் விதிகளின்படி சுங்கத் தீர்வைகள் விதிப்பது மற்றும் ஈட்டுவது தொடர்பாக அவை பொருந்துவது போன்று, உட்பிரிவு (1)இன்படி விதிக்கத்தக்க சுங்கத் தீர்வையின் விதிப்புக்கும் ஈட்டலுக்கும் பொருந்துதல் வேண்டும்.

தீர்வைகளிலிருந்து கிடைக்கும் நிகரத்தொகை இந்தியாவின் திரள் நிதியத்தில் வரவுவைக்கப்படுதல்.

4. பிரிவு 3இன் படி விதிக்கப்படும் சுங்கத் தீர்வைகளிலிருந்து கிடைக்கும் நிகரத்தொகை முதலில் இந்தியாவின் திரள் நிதியத்தில் வரவுவைக்கப்படுதல் வேண்டும், மற்றும் இதன்பொருட்டு சட்டத்தினால் செய்யப்பட்ட ஒதுக்களிப்பு வாயிலாக நாடாளுமன்றம், அவ்வாறு வகைசெய்யுமாயின், மைய அரசாங்கம், ஈட்டலின்பேரில் செய்யப்பட்ட செலவுத்தொகையைக் கழித்தபின்பு, வேளாண் மற்றும் பதனஞ்செய்யப்பட்ட உணவுப் பொருள்கள் ஏற்றுமதி அதிகாரஅமைப்புச் சட்டம், 1985இன் நோக்கங்களுக்குப் பயன்படுத்துவதற்காக அத்தகைய நிகரத் தொகையிலிருந்து அவ்வப்போது தாம் தக்கதெனக் கருதும் தொகையை அதிகார அமைப்புக்கு வழங்கலாம்.